



ஓலை 63 | ஓசை 183 | மார்ச் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்

ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகர முதல

நிர்வாகக் குழு

குு.செல்வமுத்துகுமரன்

ஆசிரியர்கள்

அ.வில்சன்

குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா & அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# வேண்டுதல்



பள்ளிக்கூடம் போன மக
பத்திரமா வீடு திரும்பணும்.
விளையாட போன மக
பத்திரமா வீடு திரும்பணும்.
கல்லூரிக்கு போன மக
பத்திரமா வீடு திரும்பணும்.
வேலைக்கு போன மக
பத்திரமா வீடு திரும்பணும்.
கல்யாணம் பண்ணி கொடுத்த மக
பத்திரமா வீடு திரும்பணும்.
வயக்காட்டுக்கு போன அம்மா
பத்திரமா வீடு திரும்பணும்.
திண்ணையில் இருக்கும் பாட்டி
பத்திரமா வீடு திரும்பணும்.

கவிஞர் சாந்தா தேவி
சென்னை

# கவிதைத் துளிகள்

வண்ண மீன்கள்
தேடி அலைகின்றன
தொட்டிக்குள் விழுந்த
பனிக்கட்டிகளை
***

ஆல் விழுதுண்ட மண்
தான் தாங்கிய வேரை
மரமாக்கி
உமிழ்கின்றது
***

பிறரை
வாழ்த்தும்போது
மட்டுமே
வார்த்தைகள்
கிரீடம் சுமக்கின்றன
***

உணவின் சுவை கூட்டும்
கடும் உவர்ப்பு கடல் நீர்
குறை கலைந்து
நிறை சொல்லும்
***

நேரங்களை
உணவாக
பார்க்காத போது
கெட்டுப் போனதையே
நா சுவைக்கின்றது.
***



கரம் ஓய்ந்த பின்பும்
சிரம் தாழ்வதில்லை
முற்றுப்புள்ளிகள்
துறந்த தவம்
முயற்சி
***

எரிமலைகளை
பற்ற வைக்கும்
பொறுப்பு
தீக்குச்சிகள்
சார்ந்ததல்ல
***

*பிறருக்காக
மகிழ்வது என்பது
முயற்சியற்ற
தியானம்

கவிஞர் அன்னலட்சுமி சீனிவாசன்
ஈரோடு

# கணினிப் பயனைக் கண்டறிவோம்

பா வகை : கழிநெடிலடி ஆசிரிய மண்டிலம்

இயங்கும் இயக்கம் இதனாலே
எழிலாய் மாறி சுழல்கிறதே
மயக்கும் மாய வலையினையும்
வகையாய் விரிக்கும் வலைத்தளமே
வியப்பின் விதையாய் விழுந்ததுவே
விண்ணை தாண்டிச் சென்றிடுதே
நயமாய் நாமும் நம்திறனை
நாடி கற்றே தேர்ந்திடுவோம்



கணினி காட்டும் கைவண்ணம்
கடலாய் பரவி ஆட்கொள்ளும்
இணையம் இணைந்தே இதன்பயனை
எங்கும் எடுத்துச் செல்கிறதே
இணக்கம் ஈர்ப்பும் இதன்மேலே
இயல்பாய் தோன்றும் பலனாலே
மணக்கும் வகையில் மணந்திடுவோம்
மதிப்பை உணர்ந்தே பயின்றிடுவோம்

நேற்றும் நிகழ்வும் நேர்நின்றே
நிலைத்த கணினி எதிர்காலம்
ஆற்றும் அரிய அருங்கொடைகள்
அறிவில் செறிவும் துணையாகும்
போற்றும் புவியும் புன்னகையால்
பூக்கும் மாற்றம் வானளவாய்
ஏற்றம் யாவும் இதளிக்கும்
எளிதாய் கற்றே வென்றிடுவோம்

கவிஞர் பூர்ணிமா சங்கர்
கோயம்புத்தூர்

# ஹைக்கூ

மரங்களை பிழிந்து
நீழலினை விதையிடுகிறது
மேகம் துளைத்த ஒளி

*

படுத்துறங்கும் சாலையை
முத்தமிட்டு செல்கிறது
குழந்தை தவறிய ஆலிக்குழைவு

*

ஒரு சொட்டைப் பருகியதும்
வானை விழுங்குகிறது
வறட்சியின் முதல் குழந்தை

*

தாய்மையை படித்து முடிக்கிறேன்
இரு கோடுகளை காண்பித்து
புன்னகைக்கிறாள் மனைவி

*

நிதானத்தை கற்றுத் தந்து
நித்தம் சண்டையிடுகிறேன்
புன்னகைக்க மறந்த குடும்பத்துடன்



கவிஞர் சே கார்கவி கார்த்திக்
நாகப்பட்டினம்

# காந்திநெறி காண வாரீர்

அகிம்சை என்னும் ஆயுதம் கொண்டு
அடக்கு முறையை எதிர்த்து போரிட்ட
அகண்ட உலகின் நாயகன் எங்கள்
அகத்தில் வாழும் காந்தி மகான்.

அமைதி என்னும் மருந்து கொண்டே
அனைத்து நோய்க்கும் மருத்துவம் கண்ட
அண்ணல் எங்கள் இதயக் கமலத்தில்
அணையாது என்றும் ஒளிரும் மின்னல்.

உண்மை என்னும் உயரிய பண்பை
உலகிற்கு உணர்திட்ட உயர்ந்த தலைவன்
உள்ளத் தூய்மையே உயர்வுக்கு வழியென
உரத்துக் கூறிய உன்னத மனிதன்.



எல்லை இல்லா உலகம் தன்னிலே
எல்லா மக்களும் சமமானவர் என்றே
என்றும் உரைத்திட்ட எங்கள் இனியவர்
எல்லோர் மனமும் ஏற்கும் கனியவர்.

ஏற்றத் தாழ்வுகள் எல்லாம் இங்கே
ஏற்க வொன்னா பண்புகள் என்றே
எல்லோர் மனதிலும் விதைத்த வித்தகர்
எல்லோரும் ஓர்குல மென்றே நினைத்தவர்.

சொல்லும் செயலும் ஒன்றாய் இருந்தால்
சொர்க்கம் நரகம் நமக்கு இல்லை
சொந்தம் பந்தம் எல்லாமும் நம்மை
சொக்க வைத்திடும் என்றே சொன்னவர்.

மனிதனை மனிதன் மதிக்கக் கற்றிட்டால்
மகத்துவம் உண்டு நமக்கு இங்கே
மனிதம் என்னும் மாபெரும் பண்பை
மறக்காது வாழ்வோம் காந்தியின் வழியிலே.

கவிஞர் செங்குட்டுவன்
ஊத்தங்கரை

# ஓட்டு போட போகும் முன் கேட்டுவிட்டுச் செல்லு!

விலைக்கு நீயும் போக விலைமாது அல்ல!
பணத்திற்காக  உரிமை விற்க பைத்தியம் நீ அல்ல!
கோட்டருக்கும் பிரியாணிக்கும் ஆசைப்பட்டால்
மனிதப் பிறவி அல்ல!
காசுதரா கட்சியை தேர்ந்தெடு!
மாற்றம் மட்டும் மாறாதது
புதிய கட்சியை தேர்ந்தெடு!
வழக்கமாக வந்தவர்கள்
என்ன செய்து சென்றனர்!
ஒருவரை ஒருவர் தாக்கியே
சுருட்டி வைப்பதைப் பாருங்கள்!
மக்கள் யாரும் நினைவில்லை
சண்டை போடும் வீணர்கள்!
நலத்திற்காக திட்டமில்லை
சுருட்டத்தானே வந்தது!
மேடைப்பேச்சு மேடையோடு போச்சு
நடை போடும் வழியிலே
தடம் மாறிப் போனதே!
வீடு வந்து சேர்வதற்குள்
மறந்து போன வாக்குறுதி!
ஆட்சி வந்த பின்னே கட்சி விளம்பரங்கள்.
சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்கும்
சின்ன சின்ன ஆசைகளை தூண்டிவிட்டு
கொள்ளை லாபம் பார்க்கிறான்!
அரசியல் ஒரு சாக்கடை நல்லவர் விலகவே.
கெட்டவர்களை விலக்கிட தூய நதியாய் மாற்றிட
துணிந்து ஒருவன் வருகையில் வாய்ப்பு அளித்து பாருங்கள்!
உங்கள் வாழ்க்கை போகட்டும் பிள்ளைகள் எதிர்காலம் பாருங்கள்!
அவர்களோடு பேசுங்கள் முடிவு நீங்கள் எடுங்கள்!
உங்கள் முடிவை மாற்றிட ஆசை போதை ஏற்றிட
சலுகை எல்லாம் உனக்கு மட்டும்
புறவாசல் வழியினிலே வருவதுதான் நியாயமா?
நம்மை சுரண்டி சேர்த்து வைத்தது
காசு தந்தால் வாங்குங்கள் நல்லவர்க்கு மட்டும் போடுங்கள்!





கவிஞர் திருமதி மோ.கோமளாநேத்தாஜி
இராணிப்பேட்டை மாவட்டம்

# தேர்தல் நேரம்

தேர்தல் நேரத்தில்
தெரிந்த தலைவர்கள்
தலை காட்டியே
தயவுடன் பேசியே
குற்றம் குறை
கேட்டு நடப்பர்.
பக்கத்தில் இருப்போரைப்
பார்த்தே தலையாட்டுவர்.

கவலையை விடுங்கள்
களிப்போடு வாழ்ந்திட
வெற்றி மாலையை
விரைந்து சூட்டுங்கள்.
கட்சி வென்றதும்
கசடை நீக்குவோம்.
பணத்திற்காய் நீங்கள்
போட வேண்டாம்.



நாட்டைக் காத்திட
நம்பிப் போடுங்கள்
ஓட்டு விழுந்தால்
ஓலம் குறைப்போம்
வீட்டுக்கு வீடு
விடாமல் ஏறி
ஆரத்தித் தட்டிற்கு
ஆயிரம் பணமென்றே

ஆசையாய்த் தருவர்
ஆனந்தம் அடைவோர்
காசுக்காக ஓட்டு
களிப்போடு போட்டு
கள்ளவோட்டிற்குத்
தனியாய் காசு வாங்குவர்.
விழித்து எழுங்கள்
விலை போகாதீர்.

நாடு காப்போரை
நலம் விரும்புவோரை
நாடியே ஓட்டு
நயமுடன் அளித்திடுங்கள்
மடமையை அகற்றுங்கள்
கடமையை ஆற்றுங்கள்.
மக்களின் வரிப்பணம்
மக்களுக்கே கையூட்டாய்.

உண்மையை உணர்ந்திடுங்கள்.
ஊராரே திரளுங்கள்.
நல்ல தலைவரை
நற்சிந்தனையோடு
தேர்ந்தெடுங்கள்.

கவிஞர் செ.கலைவாணி
மெல்போர்ன்

# தன்முனைக் கவிதைகள்

பெரிதாய் கற்றவர்க்கே
புரிதல் இல்லை
சரியாய் புரிந்தவருக்கு
சர்வமும் சிவம்
□
நிலையானஅமைதி
கல்வியில் இல்லை
தெளிவான ஞானத்தில்
உறைந்து நிற்கும் கலை.
□
கிள்ளைகளுக்கான கல்வி
சள்ளையாகிடல் தகாது
பிள்ளைகள் சலியாமல்
கற்க வழி வகு
□
கேள்விகள் கணையாகும்
விடைகள் சடவாகினால்
கேள்விகள் வேள்விகளாயினால்
விடைகள் சவாலாகும்.
□

தனிச்சிறப்பு மிக்க
கல்வி முறை வேண்டும்
நனி சிறந்த
கல்வியாளரின் கவனம் வேண்டும்
□
வெற்றி இலக்கு
வேண்டும் யாவருக்கும்
எப்படியாவது வெற்றி பெறும்
வெறி வேண்டாம் எவர்க்கும்
□

ஏழ்மை என்பது
இல்லாமை அல்ல
இன்னும் வேண்டும்
எனும் வேட்கை அல்லவோ
□
அம்பலம் ஏற்றிடும்
தன் முயற்சி மட்டும்
வம்பு பேசுவோர்
வாயை அடைத்திடும்
□
துரோணர் கைவிட்டார்
ஏகலைவன் சோர்ந்தானா
முற்று மனத்துடன்
விற்தொழில் பயின்று விற்பனானான்
□
பட்டம் பறக்கும்
நிலைக்கும் நேர்ச்சி
மாஞ்சா பிடிக்கும்
கையின் முயற்சி
□
தன்முனை அனுமன்
கடலை மடக்கினான்
தன் பலம் கொண்டே
தொடரல் தாண்டினான்



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# மணிமேகலை (மூன்று)

2. ஊரலர் உரைத்த காதை

1. தீவகச்சாந்தி விழா;

தேவர் தலைவன் இந்திரனுக்கு மரியாதை செய்யும் விழா
அவருக்கான இந்திரவிழா தீவகச்சாந்தியோடு முடியும்
நாவலந்தீவு காவல் தெய்வம் சம்பாபதிக்கு எடுக்கும் விழா
தேவர்களின் அருளை எதிர் நோக்கும் கடைசி நாள் விழா

அந்நாள் ஆங்காங்கே அழகிகளின் ஆடல் பாடல் நடைபெறும்
இந்நாளில் மாதவியின் ஆடலைக் காண மக்கள் திரண்டனர்
எந்நாளும் இல்லாத மாதவி, மணிமேகலை எதிர்பார்த்தனர்
நந்நாளில் மாதவி ஆடல் இல்லாமல் எப்படி முடியும் விழா?

வழக்கமாக ஆடும் மாதவிக்கு இன்று நேர்ந்த குறை என்ன?
பழகிவரும் வயந்தமாலை மாதவியிடம் வினவினாள் ஏன்?
"சுழலும் பூமி நின்றுவிட்டதுபோல் நகரமே இருண்டுகிடக்கு
பிழைகளை மறந்து குல மரபுப்படி மகளோடு வாஎன்னுடன்"

தாய் சித்திராபதி மகள் மாதவி நிலைகண்டு வருந்தினாள்
காய் அடித்து பழமாவதில்லை மகளிடம் எப்படி கூறுவது
வாய்மொழி வந்த பழிச்சொல்லுக்கு பயந்து நடுங்கினாள்
பாயில் கிடக்கும் அழகு மகள் கண்டு கண் கலங்கினாள்

அறுபத்து நான்கு ஆடல் கலைகளில் கைதேர்ந்த மாதவி
மறுப்பின்றி அரசருக்கு ஆடும் வேத்தியல் அறிந்தவள்
மற்றவர்க்கு ஆடும் பொதுவியல் கூத்தும் ஆட வல்லவள்
வெறுப்புற்றவளாக மகளின் தனிமை என்ன காரணம்

மாதவி உரைத்தது
காதலனின் கடுந்துயர் கேட்டும் உயிரோடு இருக்கிறேன்
ஆதலினால், மகள் மனிமேகலைக்காக உயிர் பிரியேன்
பாதகமின்றி தவ வாழ்க்கையை வாழத் துணிந்தேன்
மோகம் துறந்து மணிமேகலை துறவு கோலம் பூண்டனள்

கணவனை இழந்தவள் உடன்கட்டை ஏறி உயிர் துறப்பாள்
துணைவன் இல்லாதவள் கைம்மை நோன்பு நோற்பாள்
கணவனுக்கு பத்தினிப் பெண்டிர் செய்யும் கைம்மாறு இதுவே
இணைதல் இல்லாத நான் ஆட்டம் ஆடவோ பாடவோ முடியுமா?

தந்தையின் துயர் உணர்ந்தவள் அல்லவா மகள் மணிமேகலை
சிந்தை தெளிந்தாள் அறம் செய்ய வாழ்க்கையில் துறவியானாள்
மந்தை போன்ற மனித வாழ்வில் அவளுக்கு நாட்டமில்லை
இந்த விழாவில் பரத்தமை தொழிலை மேற்கொள்ள மாட்டாள்.




தவசிகள் தங்கியிருக்கும் இடம் சேர்ந்து அவர் வழி செல்கிறேன்
புவனம் போற்றும் அறவண அடிமிசை வீழ்ந்தேன் துன்பம் களைய
அவர் கூறினார் பற்று உள்ள மனிதன் துன்பங்களில் துவளுவான்
அவர் மேலும் கூறினார் பற்றற்றவனுக்கு என்றும் இன்பமே

உற்ற தாயான சித்திராபதிக்கு தன் முடிவைக் கூறினாள்
"மற்றவர்க்கும் எடுத்துரைப்பாயாக இனி என் வாழ்நாள் இதுவே"
சற்றும் எதிர்பாராமல் மாதவி பதில் கேட்டு கலங்கினாள் தாய்.
பெற்ற மகள் மணிமேகலை துறவு கதை ஆரம்பமாகிறது .

கவிஞர் ந. திருக்காமு

# காலம்

மௌனம் கலைந்து
எழுந்து வா.
கயவர் செருக்கறுத்து
சூழல் நேர் செய்திடு!
அழுத விழிகள்
அமுத மொழி பேசிட
ஆறுதல் வழங்கிடு.
அறம் எழ
தீமை வீழும் என்னும்
வாக்கை மெய்ப்பித்திடு!



கவிஞர் செ. தமிழ்நேயன்
தமிழ்நாடு

# கடலோர வாழ்வு

கால் தடவிப் போகும்
அலையினூடே அசைந்து
போகும் படகு! அதில்
வாழ்க்கையைத் தேடி
பயணம் போக!
எல்லையில்லாமல் பரவி இருக்கும்
நீரின் இடையில் எல்லைக்கோடு
தெரியாமல் தாண்டி விட!
வேறொரு நாட்டின் காராக்கிரகம்
அணைத்துக் கொள்ள!
அடியும் உதையும் தாங்கி
அன்பானவர்கள் காத்து நிற்க
அரசாங்கத்தின் துணையோடு
மீண்டு வந்த மீனவர்கள்!
மீண்டும் மீண்டும் கடல் மேல்
புயலும் மழையும் கண்டு அஞ்சாமல்
வயிற்றுப்பாடு பார்க்க செல்வதே
விதியென்று மருகி!
பிரியமானவர்களை மட்டுமின்றி
உயிரையும் பணயம் வைக்க!
நெஞ்சுரத்தோடு கடலை நாடும்
நிலையற்ற வாழ்வே அவர் வாழ்வு!



கவிஞர் லதா சுப்ரமணியன்
சென்னை 119

# கனவொன்றில்

காக்கைகள் நிறம் மாறி
புறாவாகக் காணக் காண்கிறேன்.
ஆமைகளாய்ச் சிட்டுக்குருவிகள்.
ஊரின் வடக்குக்குளம்
மாறியிருக்கிறது சிறுதொட்டியாக.
வாலிபத்தை அணிந்துத்திரிகிறார்கள்
தலைச்சாயங்களுடன்
வயோதிகர்கள்.
யாசிப்பவர்கள்
தர்மம் செய்கிறார்கள்.

வானில்
பகலில் சந்திரனும்
இரவில் சூரியனுமாக
வலம் வர
திசைகளை வேறு கோணங்களில்
காட்டுகிறது
திசைமானிகள்.
கருநிழலாய் விழுகிறது
நிலைக்கண்ணாடியில் பிம்பங்கள்.



எதிர்த்திசையில் உழல்கிறது
காலக் கடிகாரம்.
பிரபஞ்சத்தில் பூத்தவையெல்லாம்
ஏதோ இருந்து கொண்டிருக்கிறது
அதனதன் சுயத்தையிழந்து
முற்றிலும் மாறுபட்டு
வெவ்வேறு அரிதாரங்களுடன்
நீள் கனவொன்றில்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம்

# இனியொரு விதி செய்வோம்

இங்கே எல்லாம்
எல்லாருக்கும் கிடைத்திடவே
இறைவன் உலகில்
எல்லாவற்றையும் படைத்தான்.

மழை பெய்வதோ
மக்கள் அனைவருக்கும்.

ஆதவனின் கதிர்களை
ஆள்வோரால் மறைக்கலாகாதே.



நீதியும் நியாமும்
நீங்கள் உருவாக்கியதை
நல்லவருக்கும் கெட்டவர்க்கும்
நல்லமுறையில் பகிர்ந்திடவே.

அன்றாட வாழ்வியலில்
அரங்கேறும் காட்சிகளில்
அரசனுக்கோர் நீதி
ஆண்டிக்கோர் சட்டமே.

இனியொரு விதி
செய்வோம் வித்தியாசமேயின்றி
எல்லோரும் எல்லாம்
பெற்றிட நாமே

பசுமைப் புரட்சி
பாங்குடன் கொணர்வோமே

கவிஞர் இரஜகை நிலவன் மும்பை

# பசுமை உலகு

செடியொன்று நட்டு
தினம் தினம் நீரூற்று

நாளைய விடியலில்
நிழல் தரும் விருட்சமாகும்

காயாகிக் கனியாகி
உடன் பசி போக்கும்

விழும் விதைகள்
யாவும் தளிர்த்தெழுந்து



பார்க்கும் திசைகள்
யாவும் பசுமையாகும்

உன் சந்ததிகள் வாழும்
உலகம் அழகாகும்

மழைவளம் பெருகிட
மண்வளம் ஆகும்

நாளைய குழந்தைகள்
நாம் இன்றியும் நலமே வாழும்

பசுமை உலகு
மீண்டும் உருவாகும்

அதில் உனது பங்கு
மிகவும் உன்னதமாகும்

கவிஞர் செண்பகச் சோலையாள்
ஆயிஷ், கம்பளை

# பெண்மையைப் போற்றுவோம்

ஓடும் நதிகளில் அவளுண்டு
பாடும் கவிகளில் அவளுண்டு
மானாகத் தேனாக மலராக அல்லாமல்
பெண்ணாகப் பெண்ணைப் பார்த்தவரில்லை
சேலையில் மறைந்திருந்த அடிமைத்தனத்தை
துகிலுரிக்க முயல்கிறாள்

அங்கம் காட்டும்
அந்நிய உடுப்புகளால்
சிலருக்கு
கல்லூரிக்கனவுகள்
திருமண அழைப்பிதழில் முடிந்துபோக
பலருக்கு முற்றுப்பெறுகிறது விவாகரத்தாக
மங்கையவளின் சுதந்திரம்
பிறரால் வரையறுக்கப்படுவதில்லை



பிறர் வகுத்த வரம்புகளைத் தாண்டாதவரை
ஆணுக்குப் பெண் நிகர்
எனத்துவங்கி
ஆணா பெண்ணா என்று
பட்டிமன்றம் நடத்தும் சமூகமே
ஆணின்றிப் பெண்ணில்லை
பெண்ணின்றி அகிலமே இல்லை

தாயாய் தாரமாய் புதுமைப்பெண்ணாய்
அவள் ஏற்கும் பலவகை பாத்திரங்களால்
மறந்து போகின்றாள்
தனக்கான உண்மை முகத்தை
இயல்பாய் வாழும்
பெண்மையைப் போற்றுவோம்

அவளின் சுயத்தை அழிக்காமல்.

கவிஞர் கீர்த்தனா பு
உதவிப் பேராசிரியர்

# தாம்பத்யம்

அவன் நிறுத்திய போது
அவள் தொடங்கினாள்.
அவள் விட்டபோது
அவன் ஆரம்பித்தான்.
அவனை நிறுத்தச் சொல்லியபோது
அவள் நிறுத்திக் கொண்டாள்.
அவளை நிறுத்தச் சொல்லியபோது
அவன் நிறுத்தி நின்றான்.
அவனும், அவளும்
ஒன்று கலந்து ஒன்றாகி
ஒற்றைச் சுடராய் ஒளிர்ந்திருக்கையில்,
அவனுக்கும், அவளுக்கும்
ஒரு புள்ளி வரை
பிடிபடவே இல்லை
தொடக்கத்தின் முடிவும்
முடிவின் தொடக்கமும்



கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# அவனருள் பெற்றேனே



போற்றியே புகழுவேன்
பொன்னார் மேனியனை
சாற்றியே நாளும்
சமரசம் கொண்டு
ஆற்றலை தந்திடும்
அற்புதமான சங்கரனை
கற்றலை உடைய
கங்கையின் துணைவனை
பற்றிட எப்போதும்
பயமென்பது இல்லையே

விடையேறி வந்தவனே
விடுதலையும் தந்தே
இடையிலொரு ஊடலையும்
இவ்வையகத்தில் அரங்கேற்றிய
அடைமொழியோ உனக்காக
அன்போடு இருக்கவே
தடையேதும் இன்றியே
தமிழோடு வாழுகின்ற
சடையவனே பரம்பொருளே
சந்ததிகள் வளர்க்கும்

குழந்தைகள் துணையோடு
குற்றமற்று விளையாடியே
நிழலாக உமையாளும்
நின்னையே சரணடையும்
கழலினை நானும்
கவிதையாக்க நினைத்து
விழாவினை எடுத்தேனே
விமலனும் அருள்கூர்ந்து
அழகையே தந்திட
அவனருள் பெற்றேனே

கவிஞர் ப. வெங்கட்ரமணன்
ஸ்ரீத்தலை

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"

பாடிவைத்த கவிமணியும் பார்த்திருந்தால்
பாரினில் நடப்பதைக் கண்டு பதறிடுவான்

மேடைக்கு முழங்க மட்டும் வேண்டும் இங்கே
மேன்மை கொண்டோர் மாதர் குலமென்று

ஆடைக்கு உள்ளிருக்கும் அங்கம் மட்டும்
ஆசைதீர அள்ளிப் பருக கண்கள் சுற்றும்

பிஞ்சு மனம் என்றும் கூட பார்க்காமல்
நெஞ்சு பதறும் சம்பவங்கள் நடப்பதென்ன




பாலியல் குற்றங்களால் நாட்டினிலே
பாவை வாழ்க்கை பயம் கலந்து போனதே

வரும் காலங்கள் வளமாக அமைந்தாலும்
வரதட்சணையில் மரணங்கள் தொடர்கிறதே

விளையாட்டிலும் திறனை விதைக்க சென்றால்
வினையாக வந்து நிற்கும் பெண் பித்தர்கள்

ஊடகத்திலே உயர்வுதனை காட்டச் சென்றால்
உரசி பார்த்து புருவம்தனை உயர்த்துதிங்கே

எத்தனை துறைகளில் இங்கே சாதித்தாலும்
அத்தனையும் நகைக்குதிங்கே பெண்ணென்று

உருக்குலைந்து போவோம் என்று நினைக்காதே
உறுதி கொண்டு உயர்ந்திடுவோம் உலகினிலே

அன்றே உரைதிட்டான் என் முண்டாசு அப்பன்,
"ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை" என்று!

கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன்
சேத்தியாத்தோப்பு

# மணிமேகலை (மூன்று)

2. ஊரலர் உரைத்த காதை

1. தீவகச்சாந்தி விழா;

தேவர் தலைவன் இந்திரனுக்கு மரியாதை செய்யும் விழா
அவருக்கான இந்திரவிழா தீவகச்சாந்தியோடு முடியும்
நாவலந்தீவு காவல் தெய்வம் சம்பாபதிக்கு எடுக்கும் விழா
தேவர்களின் அருளை எதிர் நோக்கும் கடைசி நாள் விழா

அந்நாள் ஆங்காங்கே அழகிகளின் ஆடல் பாடல் நடைபெறும்
இந்நாளில் மாதவியின் ஆடலைக் காண மக்கள் திரண்டனர்
எந்நாளும் இல்லாத மாதவி, மணிமேகலை எதிர்பார்த்தனர்
நந்நாளில் மாதவி ஆடல் இல்லாமல் எப்படி முடியும் விழா?

வழக்கமாக ஆடும் மாதவிக்கு இன்று நேர்ந்த குறை என்ன?
பழகிவரும் வயந்தமாலை மாதவியிடம் வினவினாள் ஏன்?
"சுழலும் பூமி நின்றுவிட்டதுபோல் நகரமே இருண்டுகிடக்கு
பிழைகளை மறந்து குல மரபுப்படி மகளோடு வாஎன்னுடன்"




தாய் சித்திராபதி மகள் மாதவி நிலைகண்டு வருந்தினாள்
காய் அடித்து பழமாவதில்லை மகளிடம் எப்படி கூறுவது
வாய்மொழி வந்த பழிச்சொல்லுக்கு பயந்து நடுங்கினாள்
பாயில் கிடக்கும் அழகு மகள் கண்டு கண் கலங்கினாள்

அறுபத்து நான்கு ஆடல் கலைகளில் கைதேர்ந்த மாதவி
மறுப்பின்றி அரசருக்கு ஆடும் வேத்தியல் அறிந்தவள்
மற்றவர்க்கு ஆடும் பொதுவியல் கூத்தும் ஆட வல்லவள்
வெறுப்புற்றவளாக மகளின் தனிமை என்ன காரணம்

மாதவி உரைத்தது
காதலனின் கடுந்துயர் கேட்டும் உயிரோடு இருக்கிறேன்
ஆதலினால், மகள் மனிமேகலைக்காக உயிர் பிரியேன்
பாதகமின்றி தவ வாழ்க்கையை வாழத் துணிந்தேன்
மோகம் துறந்து மணிமேகலை துறவு கோலம் பூண்டனள்

கணவனை இழந்தவள் உடன்கட்டை ஏறி உயிர் துறப்பாள்
துணைவன் இல்லாதவள் கைம்மை நோன்பு நோற்பாள்
கணவனுக்கு பத்தினிப் பெண்டிர் செய்யும் கைம்மாறு இதுவே
இணைதல் இல்லாத நான் ஆட்டம் ஆடவோ பாடவோ முடியுமா?

தந்தையின் துயர் உணர்ந்தவள் அல்லவா மகள் மணிமேகலை
சிந்தை தெளிந்தாள் அறம் செய்ய வாழ்க்கையில் துறவியானாள்
மந்தை போன்ற மனித வாழ்வில் அவளுக்கு நாட்டமில்லை
இந்த விழாவில் பரத்தமை தொழிலை மேற்கொள்ள மாட்டாள்.

தவசிகள் தங்கியிருக்கும் இடம் சேர்ந்து அவர் வழி செல்கிறேன்
புவனம் போற்றும் அறவண அடிமிசை வீழ்ந்தேன் துன்பம் களைய
அவர் கூறினார் பற்று உள்ள மனிதன் துன்பங்களில் துவளுவான்
அவர் மேலும் கூறினார் பற்றற்றவனுக்கு என்றும் இன்பமே

உற்ற தாயான சித்திராபதிக்கு தன் முடிவைக் கூறினாள்
"மற்றவர்க்கும் எடுத்துரைப்பாயாக இனி என் வாழ்நாள் இதுவே"
சற்றும் எதிர்பாராமல் மாதவி பதில் கேட்டு கலங்கினாள் தாய்.
பெற்ற மகள் மணிமேகலை துறவு கதை ஆரம்பமாகிறது .

...தொடரும்

கவிஞர் ந. திருக்காமு

# அம்மா

சொல்லமுடியாத சோகங்கள்
மனதில் ஆயிரம் இருந்தாலும்

ஒருநாளும் அவள்
புன்னகைக்க மறந்ததில்லை.

அனுதினமும் உழைப்பால்
ஒரு நாளும்
அவளுக்கென உழைத்ததில்லை.

தன் பிள்ளை பசியாற
அவள் பசி மறந்தவள்

தன் பிள்ளைகளின்
ஆசையை நிறைவேற்றிட அவள்
ஆசையை அடியோடு அழித்தவள்.



ஒவ்வொரு இல்லத்திலும்
தாய் வடிவில் இறைவன் இருப்பதை
யாரும் மறுக்க முடியாது.

இவளின்றி ஒரு அணுவும் அசையாது தாயே
இப்புவிதனில் யாவும் நீயே.

கவிஞர் ஜோ மஞ்சு
மருங்கூர்

# உணர்வினில் கலந்தவளே

காதலின்பம் துய்த்திடவே
காலங்கள் வேண்டுமன்றோ
கருவிழிகளில் கலந்திட்ட
பார்வையின் சங்கமமே

இதயத்தில் நுழைந்திட்ட
இனிமையான தருணமே
நாளங்களில் பிணைந்திட்ட
காதல் ராகமே

அரவணைப்பில் அள்ளிக்கொண்ட
ஆசையின் ஆலாபனையே
உணர்வில் கலந்த
உயிரின் துடிப்பே

மனதில் மறைந்திடாத
காதலின் ஈர்ப்பே
நினைவுகள் தாலாட்டும்
தென்றலின் சுவாசமே

ஊடலில்லா வாழ்வில்
களிப்புறும் உள்ளேமே
ஓயாது துடித்திருக்கும்
இதயத்தில் காதல்மொழியே

பசியுமில்லை நாவில்
ருசியுமில்லை காத்திருப்பே
வசந்தத்தின் வாசலில்
வஞ்சியின் வருகையே

எண்ணமதில் எழிலோவியம்
ஏந்திழையின் வண்ணமே
கன்னக்குழியில் விழுந்தேன்
காதலின் எழுச்சியே



அன்புத் தீண்டலில்
பற்றிடும் நெருப்பே
மயக்கத்தில் ஒன்றிணைந்து
துளிர்விடும் ஆசைகளே

இதழ்சுவையில் இணைந்திடும்
பகலிலோர் இரவே
வஞ்சியவள் வளையோசையில்
வாட்டம் போகுமே

மோதல்கள் வேண்டாமே
மோகநிலை மாறாதே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தின், விருதுநகர்

# உயிரானவன் எனக்கானவன்

என்னை வசிகரிக்கும் ஆண் அரசனவாய் நீ
உன் வதனம் கண்டு நான் விழிக்கும் பூவண்டு

உன்னை சுற்றி வர நீயே என்னுலகமாகி போவாயே
அன்பே முல்லைக்கொடியாய் நானும் படரட்டுமா
எத்தனைக்கு எத்தனையோ காதல் உன்மேல் எனக்கு
அத்தனையும் கொட்டித்தீர்க்க வேண்டுமே
அந்நாள் எப்போதோ
காலம் ஓட வயதும் கூட
கேள்விக்கணக்கு வர
விமர்சனங்கள் வந்துக்குவிய
நான் என்ன செய்ய விதியை தாண்டி ஏதாவதோ
அன்பே பிரார்த்தனை செய்திடுகிறேன்
துதிப்பில் மாறா தேன் வண்டாய் நீயாக
ஏன் இன்னும் மாற்றமில்லையோ
குறைகள் என்றும் மதிப்பிடுகினரே
காதல் தோல்வியென்றுமே சொல்கினரே



என்ன செய்திடட்டும் உன்னை
நினைத்துருகி மருகி மால்வேனோ

அயரவில்லை அலறவில்லை
தாமதமாகுவதில் நிலைப்பு நின்று
தாங்குமென்று காத்திருக்கிறேன்

வா அன்பே முரசு சப்தமாய்
ஆதரித்து அடங்கலாம்

தென்றலோடு பிணையும் வானாயாய்
இணைந்து வாழலாம்

காந்தத்தில் உரசிடும் தீக்குச்சி போல வாழலாம்
பிரிவென்றதில் மரணமட்டும் வரட்டும்
அதிலும் கரைபுரளாதே
அலையாய் இணைந்திடுவோம் மரணத்திலுமே

கவிஞர் சுஹ்னாஸ் பேகம்
புத்தளம் (இலங்கை)

# வசந்த முல்லை

தூறல் விழுது
பசுமை எழுது
ஆனால் பஞ்சம்
தீரவில்லை



வியர்வை பொழிந்தும்
ரத்தம் வழிந்தும் நெஞ்சில்
வஞ்சம் சேரவில்லை

நைந்த மண்ணில்
வேய்ந்த நாற்று
விளைய மறுக்கவில்லை

அதை அறுத்தெடுத்து
ஆய்ந்த கைகள்
அள்ளி ருசிக்க உரிமையில்லை

அகண்ட வாணம்
அழுத மேகம்
வீசும் காற்று
விடியும் வெளிச்சம்
அனைத்தும் இங்கே
அனைவருக்கும் இருக்க

ஓடும் நதியும்
உருண்ட மலையும்
பரந்து வளர்ந்த
பசுமை நிறைந்த காடும்
பாலைவனமும்
சோலை நிலமும்
இன்னார்
இன்னாரென்றி ருப்பதேனோ.

இயற்கை இயற்கை
என்றுரைப்பர்
எடுத்து காப்போம் என்றுரைப்பர்
இயற்கை நிலத்தில் அனைவருக்கும்
உரிமை உண்டு என்றுரைக்க
வாய்கள் இன்றி புழுத்து கிடப்பர்

உழைப்பை சுரண்டி
உண்டு கொழுக்க
பிழைப்பு வாதிகள்
பிரித்த எல்லை

உழைக்கும் கைகளில்
கிடைக்கும் போதுதான்
பூக்கும் இங்கே வசந்த முல்லை.

கவிஞர் ப. சுபாஷ் சந்திர போஸ்
ஆரம்பாக்கம்

# நீளும் பாதையில்

நீளும் பாதையும் சாலையும்
நிகரில்லா இடத்தை நிறுப்பும்
உறவின் பின் நில்லாத ஓட்டம்

நித்திரையிலும் நினைவுகளிலும்
மூழ்கிய உயிரான சொந்தமொன்று
விலகிய உறவை பிரியாது நினைவில்
நிறுத்தியபடியே காலத்தை



இரண்டு வாழ்வாய் வகுத்தே வாழ்ந்திட
உடனோடும் உயிருக்கு பதில்
சினத்த வதனம்.
வெறுத்த சொற்கள்.

பிணைந்த விரல்கள் விகுதியாகுமோ..
தொலைத்த உறவுக்கு மதிப்பானால்
அகத்தில் பதித்த உயிருக்கு?

பொறையோடே மையல் கொள்ள
காத்திருக்கும் ஜீவி தான் யானும்.
ஆடவனும் காத்திருக்கிறான் அவளுக்காக.
வஞ்சனியும் காத்திருக்கிறாள் அவனுக்காக.

கவிஞர் சு. கார்த்திகா
பழநி

# குழந்தைக்காக ஏங்கும் ஒரு பெண்ணின் ஏக்கம்

என் வயிற்று தொப்புள்
என் தாயை நினைவுப்படுத்துகிறது
நான் தாயாகாமல் இருப்பதையும்
நினைவுப் படுத்துகிறது

உணவால் மட்டுமே
நிரம்பிக்கொண்டிருக்கும்,
இந்த வயிறு
உன்னால் நிரம்ப மறுக்கிறது ஏனோ



மாதத்தில் மூன்று நாட்கள்
தள்ளிப் போனால்
நீ தான் வந்திருக்கின்றாய்
என எண்ணி
சந்தோஷத்தில் பொங்குகின்றது
எனதுள்ளம்

நீ வேண்டுமென
இறைவனிடம் மண்டியிட்டு
தவம் கிடக்கின்றேன்
ஏமாற்றாமல் வந்து விடு
என்னிடம்

கவிஞர் சாதீக் பாத்திமா சம்ஹா
மூதூர் (இலங்கை

# அழகு

குமரியென்றாலே பேரழகுதானே
குங்குமம் வைத்த நெற்றியழகு
குச்சிப்பிடி இடையழகு
குஞ்சம் வைத்த சடையழகு

குறுகுறு பார்வையழகு
குடம் தூக்கும் நடையழகு
குணவதியாக தெய்வீக அழகு
குதிகால் அணியும் கொலுசு அழகு



குபீரென்ற இளஞ்சிரிப்பு அழகு
குழி விழும் கன்னம் அழகு
கும்மிருட்டில் பயம் அழகு
குமுதவாய் உதட்டழகு

குரலோசையில் பேச்சழகு
குலு குலு மகிழ்ச்சி அழகு
குவிகின்ற கரம் அழகு,
குற்ற வேளையில்
திருதிரு பார்வை அழகு

குறிப்பாக செய்யும் வேலை அழகு
குளிர்கின்ற வேலையில் கோலமழகு
குழந்தையிலே பேரானந்த அழகு
குமரிப்பருவம்தான் அழகோ அழகு

குற்றம் அறியா 90'நூற்றாண்டுப் பெண்களின்
குறைவற்ற அழகின் அழகோ அழகு!

கவிஞர் நீலா சுபாஷ்

# பெண்மை வாழ்கவென்றே

இல்லம் இளைப்பாற தம்மையே ஒப்படைத்த
தியாகத்தின் சுடரென விளங்கும் உழைப்பாளிகள்
உழைப்பின் பாதைச்சூட்டில் தான் நடந்து
குடும்பத்தின் பயணத்தை சுகமாக்கிய கருணைவாதிகள்
கடமையை வாழ்விக்கும் கடவுளெனக் கொண்டு
இல்லறத்தை உயிரோட்டத்தில் நிலைப்படுத்திய ஆணிவேர்
ஏணியாய் நின்று வானிற்கு உயர்த்திய
இதயத்தில் அன்பைத் தேக்கிய இலட்சியவாதிகள்
இன்பதுன்பங்களை வெளிக்காட்டாத நெஞ்சுரவாதிகள்.
வறுமையின் கொடுமையை தமக்குள் வைத்துக்கொண்டு
நம்மை ஆனந்தப்படுத்தும் நடமாடும் தியாகிகள்
கடனையும் கவலையையும் நெஞ்சில் சுமக்காதேயென
வாழ்ந்துகாட்டி வழியமைத்த பாச வள்ளல்கள்
ஊஞ்சல் கயிறென பந்தங்களைப் பிணைத்திட்டவர்கள்
காவியமென நமைக் காத்திட்ட கடவுளாய்
காலமுள்ளவரை காவலென துணை வரட்டும்.



கவிஞர் இளையவன் சிவா

# போத்தலில் தீட்டலாமா?

கத்தியைத் தீட்டலாம்
கல்லில்!
புத்தியைத் தீட்டலாமா
போத்தலில்?

அடேய் பைத்தியக்காரா
பகுத்தறிவை என்ன
பங்கு பிரித்தா
கொடுத்துவிட்டாய்
தவணையில்?

சிந்தி
செயற்படு
செல்லரித்து விட்டதோ
செயலிழப்பதற்கு மூளை?

போத்தல் வாழ்க்கை ஏற்படுத்திய
பீத்தல்களை எண்ணிப்பார்!
பீத்தல்களால் குடும்பத்திலே
ஏற்பட்ட பிரச்சினைகளை
நினைத்துப் பார்!

போதுமடா போதும்
போத்தலை அறவே இனி
மறந்துவிடு!
கையிருப்பில் இருந்தால்
எறிந்துவிடு!



புத்தகம் பத்திரிகை
என்பவற்றையே
நித்தமும் இனித்தேடு!

புத்தகத்திலேயே
புத்தியைத் தீட்டு!
பகுத்தறிவாளன் உன்
புதுமையைக் காட்டு!

போத்தலில் தீட்டாதே!
பொல்லாத ஆள் நான்!
கத்தியைத் தீட்டுவேனே
கவனமாயிரு!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன்
இலங்கை

# பெண்ணே அதிசயம்

பெண் என்பவள் புதிரான புதிராவள்
கற்பனையில் காவியமாய் ஓவியமாய் வருபவள்

கஷ்டங்கள் வந்தாலும் தாங்கி கொள்வாள்
வலிகளிலும் வழியைத் தேடி பயணிப்பாள்

குழந்தைக்காக எதையும் தாங்கும் போராளியாவள்
மரபுகளை எல்லாம் கட்டி காப்பவள்

யாருக்காகவும் எதையும் விட்டுக் கொடுக்காதவள்
செய்யும் செயலில் கடமை தவறாதவள்

அறுசுவை உணவை இன்முகத்தோடு படைப்பவள்
பன்முக பார்வை நோக்கம் கொண்டவள்

புன்னகையால் அனைத்தையும் சாதித்து காட்டுவாள்
புவியை ஆளப் பிறந்த பூமங்கையவள்

கோபத்தில் எரிமலையாய் வெடித்து சிதறுவாள்
பனிப்போல குளிரும் உள்ளம் கொண்டவள்

தோழமைக்காக தோள் கொடுத்து நிற்பவள்
எழில் கொஞ்சும் வண்ண மலரானவள்

கருணை குணத்தால் நிலமகளும் போற்றுவாள்
வாழும் காலத்திலும் வழிக் காட்டுவாள்




கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம்
நாகர்கோவில்

# நிம்மதியின் சிறகுகள்

தவிர்ந்து கொள்வது
தவிப்புகளைக் குறைக்க வல்லது
அமைதி கொள்வது
அனாமேதய நெருக்கடிகளைத் தளர்த்த வல்லது

மௌனம் கொள்வது
பெருந்தீயொன்றை அணைக்க வல்லது
நிரூபணம் செய்யாமல் இருப்பது
இழிவடைவதில் இருந்து காப்பது



முடிவெடுத்தவர்களோடு விவாதிக்காதிருப்பது
வீண் விரயத்தைத் தடுப்பது
தேவையற்றவற்றைக் கட்டி
அழாதிருப்பது பேரழுத்தம் தராதது

புறக்கணிப்புகளுக்கு விளக்கம் கேட்காதிருப்பது
பெரும்புண்ணியம் சேர்ப்பது
வீசப்படும் விடுகைப்பத்திரங்களுக்கு
அனுமதிப்பது அனுகூலமாவது

தூரங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்பவர்களைத்
துரத்திச் செல்லாதிருப்பது நிம்மதி தருவது
ஆதலால்,
சுமைகளை விடுவித்து விடு
சிறகுகள் தானே முளைக்கும்.

தனிமையும் சுதந்திரமும்
பழுதின்றிப் பெரிதாகக் கிடைக்கும்.

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்
ஏறாவூர் (இலங்கை)

# எங்களுக்கு எல்லாம் கிழக்கு

அதிகாலை ஒருமணிக்கே
டிவிஎஸ் வண்டிகளை எடுத்து
பால் விற்க கிழக்கே செல்கிறோம்

காலை ஆறுமணிக்கு
மேற்கே
வலுப்புரம்மன் கோவில் செல்லும்
கே பத்தாம் நம்பர் பேருந்தில்
வந்திறங்கி
வடக்கால புதூர்க்கு
வெங்காயம் அரிய
அம்மாமார்கள்
வேகமாக நடையைக் கட்டுகிறார்கள்



அதன் பின்பு ஆறரை மணிவாக்கில்
நூல் மில் போலிரோ ஒன்று
ரிவேர்ஸ் எடுக்கும்
சிக்னல் சத்தம் கேட்கும் போது
காலை ஷிப்ட்க்கு
உணவு பாத்திரங்களுடன்
சிட்டாய் பறக்கிறார்கள்

அதுக்குள்ள காலை மணி
ஏழானதும்
தெற்கே திருப்பூர் செல்லும்
வெள்ளை நிற
பனியன் கம்பெனி
வண்டி வந்து விடுகிறது

இப்போது ஊரும்
கொஞ்சம்
விழித்துக் கொள்கிறது.

கவிஞர் இரா. மதிராஜ்

# கடலோர காற்றில்

பின்னிப்பின்னி நடை பயிலும்
பிரியாது அணைத்து கிடக்கும்

பெருங் கூச்சலென சிலபொழுது
பேராவலில் எல்லை தாண்டும்
சிணுங்கி சிணுங்கி சிலபொழுது
சிங்காரமாக நனைக்காது திரும்பும்

கவலைகள் கழண்டு
கடல் மணலோடு சரியும்

மௌனத்து இரைச்சல்
அலையோடு அதன்வழி நகரும்

சிறுபிள்ளை கட்டிய வீட்டில்
சிலநொடி

வாழ்ந்து விட்டு
கலைத்து தப்பிக்கும்

பாதந் தொடும் ஆவலில்
விரல்மீட்டி விளையாடும்

காதலின் விந்தைகள்
கணநேர காவியங்கள்
கடற்கரையின் விந்தை சொல்லும்

ஏதோ ரகசியம் பேசிப்பேசி
தனக்குள்



சிரித்து தத்தித்தத்தி மணலோடு
நொடிதோறும் கிள்ளிப்போகும்

பார்வையில் விழுங்கி
பயணத்தில் கொண்டு போகிறேன்
வீடுவரை என்னோடு வந்துவிடு

விடியும் வரை
கனவுகளில் நிறைத்திடு
அலை பேச்சில்
கனவுகளை கலைக்காது
கண்களுக்குள் உறங்கிடு!

கவிஞர் ஜெயப்பிரபா
சென்னை 81

# என்னவளின் காத்திருப்பு



மெய்த் தீண்டா
மெய்யானக் காதல்
உயிர் தீண்டி
உள்ளம் தீண்டி
தொல்லை தரும்
எல்லை இல்லா
அன்பின் ஊற்று

அவளுக்காக நான்
காத்திருந்த நொடிகளில்
என்னையே தொலைத்தேன்
எனக்காக அவள்
காத்திருக்கும் நொடிகளில்
தன்னையே தொலைத்திருப்பாளோ

கதிரவனின் கதிர்கள்
உதிர்கின்ற பொழுது
அவள் மலர்ந்திருப்பாள்
மதியொளிக் கதிர்கள்
உதிர்கின்ற பொழுது
அவள் வாடியிருப்பாள்

மலர்தலை காண
வாட்டம் போக்கிட
நினைப்பது உண்டு
என்னவளின் காத்திருப்பு
எனக்கான வசந்தகாலம்

காதலின் கடினங்களில்
கலங்காது இருக்கும்
அவளைக் கண்டு
வசந்தமான வாழ்வை
தொடங்கிட ஆயத்தமானேன்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார்
ஈரோடு

# இளமை மொழி

கூட்டுறவே நாட்டுறவாய் வாழ்ந்த முன்னோர்
வளம் பல கண்ட
அழகான வாழ்க்கை அமைந்த பண்பாடு
தமிழன் கண்ட ஒப்பு உயர்வு வாழ்வு
ஒற்றுமையால் உயர்வு கொண்ட
உழைப்பாளி வாழ்வு
உலகிற்கு வழிகாட்டி உயர்ந்த தமிழ்நாடு
ஒன்றுபட்ட காளைகள் நான்கும்
சிங்கத்தையே எதிர்த்த சீர்மிகு வீரம்
திசைக்கு ஒன்றாய் பிரிந்த காளைகள்
சிங்கத்தின் சூழ்ச்சியால் மடிந்த கதையை
சொல்லித் தந்த நீதிக் கதைகள்
மனித வாழ்வின் மேன்மை சொல்லும்
உறவை கூட உயிராய் போற்றி
நட்பும் கூட மூச்சாயான வார்த்தை
மாறா பேச்சும் கூட
தமிழன் வாழ்வின் மரபு ஆச்சி
இதுவே தமிழனின் சிறப்பும் ஆச்சி
எதிரியை அழிக்கும் வாலின் வீரம்
நீதியை நிலைநாட்டும் செங்கோலின் தீரம்
மக்களாட்சியின் மாண்பை அகிலத்திற்கே சொல்லும்
'குட ஓலை' ஆட்சி
அன்றே சொன்ன தமிழனே சாட்சி
கடை ஏழு வள்ளல்களின் கொடைத்தன்மை சொல்லுமே
யுகம் பல கடந்தாலும் 'இளமை மொழி' நம் மொழி
அதுவே நம் தமிழ் மொழி




கவிஞர் ஜேபி. பன்னீர்செல்வம்
சேத்தியாத்தோப்பு

# போர்

## சென்ரியுக்கள்

காற்றில் கிழியும் குண்டுகள்
இறந்த ஆன்மாக்களின் மௌன ஓலத்தில்
போரின் கொடூர முழக்கம்

இரத்தக் கறையுடன் மலைகள்
போரின் எதிரொலிகள் கொஞ்சம் கொஞ்சமாய்
அமைதி மட்டும் தொலைவில்

போர்க் கள சிதைவுகள்
பெற்றோரை இழந்த குழந்தை தேடுகிறது
அமைதிக்கான விதைகள்




மருத்துவமனை இலக்குகள்
குண்டுகள் புரிந்திடுமா என்ன?
பிஞ்சுகளின் கண்ணீர்

ராணுவ பட்ஜெட்
பாதுகாப்பிற்கென எல்லைகளில் கொட்டப்படும்
ஏழைகளின் சேமிப்பு

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி
பிச்சாண்டார் கோவில்

# அம்மா

தாய்மை என்பதே
பூமிக்கு அச்சாரமாய்!
இங்கு சுழலுதம்மா!
கோபத்தில் சுட்டெரிக்கும்
சூரியனாய்!
அடுத்த நிமிடம் பனிபோல்
குளிர்விக்கும் நிலவாய்!
இன்ப துன்பங்களில்
கணவனுக்கு நிகராய்!
வாழையடி வாழையாய்
சந்ததிகள் சுமந்தாய்!
பொறுமையின் சிகரமாய்!
அன்பின் ஆணிவேராய்!
அரவணைத்து செல்வதில்
அலைகடலாய்!
தன்நலம் இன்றி மற்றவரின்
நலமோடு மகிழ்வித்து மகிழும்!
எத்தனை மகுடம் சூடினால்
தாய்மையே கீரிடமாகும்!
அம்மா என்ற அழைப்பிற்கு
வேறு எதுவும் ஈடாகுமா!
கோடி கோடியாய் கொடுத்தாலும்
உனக்கு நீ தான் நிகரம்மா !
ஏன் என்றால் நீ என் அம்மா!



கவிஞர் சாரா ஜகன்
சென்னை

# அரசியல் துரை

காணாத தேடலில் கண்டு கொண்டேன்
கரம் என்ற ஒன்றை காலத்தில் கண்ணீரில்லாமல்
இளம்பிள்ளையின் தாகம் பருவ வயதில் பல வேடம்
ஆம் நடக்குது என் ஊரில் ஒருவனாக அவனும் இன்று
குழம்பியது முன்னிலை முற்போக்கு மூத்தவர்களும்
இவன் ஒருவனை கண்டு ஏடு பிடிக்காத
எழுத்துக்கு இவன் காட்டிய எழுத்து
இவனின் அரசியல் அரங்கேற்றம் அன்று முதல் ஆரம்பம்
பார்க்க பட்சிளம்பில்லை பரவசத்தில் தில்லையின் வெள்ளை
இவன் ஆட்டமும் அரங்கேற்றமும் நாட்டமும் எப்படி நம்புவது
இன்று நேற்று நாளை என்ற கோணத்தில்
காண முடியாத இவன் பாவணையில்
அரசியல் பித்துகளில் இவன் ஒரு வித்தாக இன்று
போட்டிகள் ஏராளம் போட முடியாது தாராளம்
நம்பகத்தன்மையில்லா நயவஞ்சகன்
நாலு பேருக்கு அல்ல நாளுக்கும்
இவன் வஞ்சகத்தின் நயம் நலமோடு நலமுண்டு
மாமாவின் தோரணை இவனின் அரசியல் பாவனை
பாதை காட்டும் ஒரு முகம் இவன் அரசியலில் புதுமுகம்
ராமனின் சீடனும் இவனே அனுமன் மானுடனும் இவனே
ஊரில் ஒரு பங்கு தெருவில் பல பங்கு
காணாத காட்சிகளில் இவன் காட்டும்
அரசியல் வித்தைகள் ஏராளம்
கட்டும் கரங்களில் இவன் வெட்டும் துளிர்
கூடு விட்டு கூடு பாய்கிறது தினம் இவன் ஒரு அரங்கேற்றத்தில்
அரசியல் ஆணவம் இல்லை அறம் என்ற செயலில்
இவன் தொண்டு இவன் மாமனைக் கண்டு மாறாத மாற்றம் ஒன்று
இங்கு நான் கூறுவதே இன்று நன்று ராமலிங்கம் துரை என்னும்
கொடி பறக்கட்டும் கொள்கை மாறாமல்
திறமை முயற்சி கட்டமை எனும் அரசியல் கழகத்தில்
கலை கட்டுதே இவன் பாவனை.



கவிஞர் ம. செல்லமுத்து
நூர்த்தப்பூர்

# நீ மட்டும்தான்

என்னுடைய
அனைத்து கேள்விகளுக்கும்,
நூலகமாக இருப்பது நீ.
என்னுடைய
அனைத்து காயங்களுக்கும்,
மருந்தகமாக இருப்பது நீ.
என்னுடைய
அனைத்து சோதனைகளையும்,
சாதனைகளாக மாற்றுவது
உன்னையன்றி வேறு யாரு.



கவிஞர் பெ. சுரேகா
திண்டுக்கல்

# தேயிலை தோட்டம்

எழில் கொஞ்சும் இயற்கையின் இரகசியம்
எல்லையில்லா இறைவனின் அதிசயம்
பசுமையின் இருப்பிடம்
பாமரனின் பிறப்பிடம்
ஏழ்மையின் வசிப்பிடம்
எண்ணற்ற உறவுகளின் சொர்க்க பூமி
பச்சை பசையென்ற தேயிலையின்
பக்கத்து வீடும் அழகாகும்
படிக்க ஏங்கும் பால் நிலவும்
பந்தியிட பாய் மறுக்கும்
தேயிலையோடு தேநீரும்
தேனாராய் பெருக்கெடுக்கும்
தேகம் நடுங்கும் குளிருக்கு
விறகு தரும் வெதுவெதுப்பு
வீட்டிற்கு முன் தென்னதோப்பாய்
தேயிலையின் நிழல் கூடும்
கண் நீட்டி பார்க்கும் இடமெல்லாம்
தேயிலை பாய்விரித்து படர்ந்திருக்கும்



கவிஞர் பரிமளா மணி
இலங்கை

# உள்ளம் குளிரும்

நம் வீடு தேடி வரும்
உறவினர்களுக்கு முதலில்
தண்ணீர் கொடுப்போம்.

நம் வீடு தேடி வரும்
நண்பர்களுக்கு முதலில்
தண்ணீர் கொடுப்போம்.

தெரியாத நபர்கள் கூட
நம் வீடு தேடி வந்தால்முதலில்
தண்ணீர் கொடுப்போம்.

நம் வீடு தேடி வரும் பறவைகளுக்கும்,
தண்ணீர் கொடுப்போம்.



கவிஞர் அ. செல்வராஜ்
உடுமலைப்பேட்டை

# பெண்ணே!

உனக்காக உலகம்
தொடங்கியதிலிருந்து
போராட்டம்தான்
நடந்து கொண்டுதானிருக்கிறது.

அன்று
இரவிக்கை போடுவதற்கு.
இன்று
இரவிக்கை போடச்சொல்லி.
சுதந்திரம் எனும் சிந்தாதத்தை
இன்று வரை வாயாலே பேசி
வடை சுடப்பார்க்கிறார்கள்.

பெண்ணே!
உன் தீயை தீபமாக இருக்கும்வரை
ஏற்றுக்கொள்ளும்.
தீப்பந்தமாக மாறும்போது
வேறு பெயர் சூட்டப்படும்.

உன் திறமையை குண்டுச்சட்டிக்குள்
குதிரை ஓட்டினால் குற்றமற்றவள்.
குணம் மாறாமல் வெளியில் வந்தாலும்
குற்றம் பிடிப்பார்கள்.

தேவைப்படும்போது
தேவதையாக கையாளுவார்கள்.
இல்லாதபோது தெருநாயைவிட
மோசமாக நடத்துவார்கள்.



அறிவுரை தேவையில்லை இனி
அனுபவமே தேவை.
அதிசயம் உன்னுள்ளே.

அறத்துடன்,
ஆணவமில்லாமல்,
இன்முகத்துடன்
ஈடேற்றம் அடைய
உலகம் மேம்பட,
ஊக்கம் கொண்டு,
எத்திசையும்,
ஏக்கமில்லாமல்
ஐம்புலன்களயும் ,
ஒருமித்து ஒய்யாரமாய்
ஓர்முனைப்புடன்
பிடித்த வாழ்வையும்,
கடைபிடித்த கட்டுப்பாட்டையும்,
நெறியுடன் நெஞ்சுநிமிர்த்தி வாழ்.

அடுத்த தலைமுறைக்கு வரலாறாய்
வாழ்ந்துவிட்டு செல்.

கவிஞர் பானு அப்துல்லா

# இப்படிக்கு உன் காதலி

என் வாழ்வில் வசந்தமாய் வந்தாய்
என் வாழ்வில் ஒளியை ஏற்றினாய்.
பெண்ணை தீண்டும் கயவர்களின் முன்னே
என்னை கம்பீரமாய் நடக்கச் செய்தாய்.

ஆணினத்திற்கே இலக்கணம் நீயாவாய்
உன் அன்புக்கு நீயே ஈடாவாய்.
கடுமையில் சிறந்தவனாய் இருந்தாலும்
கன்னியத்தைக் காக்கவும் நீயே முன்வந்தாய்.

என் மனதிற்கு மருந்து நீயாவாய்
என் மனதின் ஆறுதலும் நீயாவாய்.
துன்பங்கள் பல வந்து போனாலும்
அதை உடைத்தெறிந்து நீயே தகர்த்தினாய்.



கவிஞர் ரோஹிணி ராஜாமணி
மலேசியா

# குழந்தையிடம் கற்றேன்

அடம்பிடித்து அன்பு முத்தத்தை வாங்க
ஆரவமின்றி சுட்டித் தனமாய் சேட்டைகள் பல செய்ய

இளங்கன்று பயம் அறியாதென உணர்த்திட
இன்னிசையான புன்னகையில் இகழ்வோரையும் தன்வசப்படுத்த

கேட்டவுடன் உதவிடும் எண்ணமது வந்திட
கேளாமல் கொடுக்கும் முத்தமதை கொடுத்திட

உலகத்தையே மறந்து உறங்கிட
உவகை கொண்டு நிதம் நடந்திட



கன்னக்குழி சிரிப்பில் பிறர் மனதைக் கவர
காலையிலும் மாலையிலும் புன்னகையில் வலம் வர

தத்தித்தத்தி நடை பயின்றிட
தாவி விழுந்திடினும் உடன் எழுந்திட

கள்ளமில்லா அன்பினால் கட்டுண்டு கிடக்க
கள்ளமில்லா சிரிப்பால் பலர் மனதை கொள்ளை அடிக்க

மழலை மொழி பேசி மகிழ்ச்சியாக்க
மங்காத செல்வம் மக்கள் செல்வமென பெயர் எடுக்க

இன்னும் இருக்குதுங்க சின்னஞ்சிறிய
குழந்தைகிட்ட நான் கற்றுக் கொண்டதுங்க

கவிஞர் இரா. கோமதி
பொள்ளாச்சி

# மாண்புமிகு மகளிர்

கயிறும், மெட்டியும், முக்காடும், பர்தாவுமாய்
அடையாளங்களின் முகமூடிக்குள் தன்னை இருத்தி
மூச்சு முட்டுதலிலும் விசும்பி
தன் முகம் தேடும் சுயம்புவாய்.

அகமோ, அரசியலோ, சமுதாயமோ, சாக்கடையோ
எங்கெங்கெனினும், எச்சாடலிலும்
பெண்மையை இழுத்திடும் வசவுகளில்
நெளியும் எகத்தாளப் புழுக்களை
சுட்டெரிக்கும் சூரியக் கதிராய்.



கயமைகளின் குதறலில் கடியுண்டு
உதிர்ந்தது பிஞ்செனினும்.
பொத்தி வைக்காததுன் குற்றமெனக்
குதறும் நயவஞ்சகக் கூட்டமதை
எத்தித்தள்ளி நிமிரும் நறுமுகை யாளியாய்.

பெண்மையாய், தாய்மையாய், மனிதியாய், இறைவியாய்
எத்தனை பிறப்புகள் எடுத்தால் என்ன?
உரிக்க, உரிக்க ஒன்றுமில்லாத வெங்காயமாய்
தடியேந்திய 'பெரியார்'கள் சூழ
பீடு நடையிடுகிறது.

மண்ணில் தழைத்து விண்ணையே வளைக்கும்
வல்லமை படைத்த
மாண்புமிகு மகளிர் கூட்டம்!
மாற்றங்களைத் தேடிக்கொண்டே.

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜ்
பட்டாபிராம், சென்னை

# கரையாத நேசம்

திறவாத மனம்
தீர்த்தக் கரைதினிலே
நல்லிசை கரைசலில்
நலத்தை கேட்கும் மனம்

எட்டிய தூரத்தில்
ஏனிந்த மௌனங்கள்
கட்டிய சரங்களில் வழிந்த
நேசத்தின் அழைப்பில்

இமைக்கூட இதழை
விரித்த அழகில்
கண்டுகொண்ட கவிதை உள்ளம்



என்னதான் சுகமோ
தட்டிக் கழிப்பதில்
அங்கே செல்லப்படாத
ஓர் வார்த்தையை தேடும்
தேடலில்

கரைகாணாத அன்பில்
அகங்கள் பேசுவதை அறியும்
முகந்திருப்பும் முகங்கள்
அலைபோல் உறவாடும்
அதியக் காதல்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்
திருப்பூண்டி

சுட்டும் விழி சுடரின் ஒளி தேவதையே
மரகத வீணையின் மாசற்ற நாதமே
சீர்மிகு குடும்ப பல்கலைக்கழகமே
கங்கையின் புனிதமே
வண்ணமலரின் வசீகர அழகே
தேனின் இனிய சொற்பதமே
உயிரை உருவாக்கும் பிரம்மையே
பூத்துக் குலுங்கும் நந்தவனமே
உதவிக்கரம் நீட்டும் உற்ற தோழியே
தியாக சொரூபத்தின் பிம்பமே
அறுசுவையையும் படைத்து
அளிக்கும் அன்னபூரணியே
குடும்பத்தின் குத்து விளக்கே
கருவை தாங்கும் சுமை தாங்கியே



பெண்ணே!
நீ இல்லையெனில் இவ்வுலகம் இல்லை
மங்கையராய் பிறந்து
மாதவத்தை பெற்ற
பெண்களை போற்றுவோமாக
இம்மகளிர் தினத்தில் பெண்களுக்கு ஏற்படும்
இன்னல்களை தடுப்போமாக
பெண் சிசுவையும் காப்போமாக!
பெண்கள் நாட்டின் கண்கள்.

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி
ஊத்தங்கரை

# தேடலின் துவக்கம்

உலகை முதலாக நோக்குகையில் மனத்துள்ளே
உருவாகும் கேள்விகளே தேடலின் துவக்கம்!
ஓடும்போது உடன் ஓடிவந்த நிலா!
இரயில் பயணத்தில் விரைகின்ற மரவரிசை!
ஒளிவந்த பின்னாலே ஒலிக்கின்ற வானவெடி!
ஒளித்து வைத்த மயிலிறகு குட்டிபோடுமென
ஒவ்வொரு நாளும் புத்தகத்தைப் பார்த்திடுதல்!
விழுந்த பால்பற்கள் விதையாகி முளைக்குமென
அழுத்தி வைப்போம் தோட்டத்தில் மண்ணுக்குள்!
இவையெல்லாம் சிறுவயதில் வியப்பளித்த நிகழ்வுகளே!
விடைகாண முயலுகையில் தொடர்கிறதே தேடல்கள்!
நடக்காத சிலவற்றை நாமுணரத் தொடங்குகையில்
நம்மிடமிருந்து உதிர்ந்திடும் கற்பனைச் சிறகுகள்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# பூ மலரும் நேரம்

மொட்டுகள் மலர்வது அதி
காலையிலே அந்தி மாலையிலே.

கன்னியர் மொட்டவிழும்
வேளையினுக்கோ ஒரு வரம்புமில்லே.

உணர்வினிலும் அவர் உண்டியிலும்
வாழ்வினிலும் வரும் வழக்கத்திலும்.

அயிரமாயிரம் மாற்றங்கள்
மனதளவில் மிக ஏற்றங்கள்.

மார்பில் உயிர் ஓமோன்கள்
சுரந்திடுமே உடல் ஹார்மோன்கள்.

பூப்படைவர் அவர் மூப்படைவர்
கற்படைவர் ஒரு காரணமறியார்.

வயதினிலே மிக சிறுவர்களாம்
பருவமாற்றத்திலே மங்கையராம்.

காலவோட்டத்தின் மாற்றம் இது
கவனித்தால் வாழ்வினில் ஏற்றம்.

பள்ளியில் பாடத்தை புகட்டிடு
பிள்ளைக்கு எடுத்து அதை உரைத்திடு.

தோற்றத்தில் இல்லை வளர்ச்சி
அறிவினுக்கு செய்திடு புரட்சி.



கவிஞர் கோ. தனுசன்
மட்டக்களப்பு (இலங்கை)

# நிறம்

அன்பெனும் கடலிலே
மூழ்கிடும் சிலர்
பணமெனும் படகிலே
பயணமோ தினம்

வாழ்வெனும் தேரிலே
வசதியே சக்கரம்
வருமுன் காத்திடும்
அற்புத குணம்

வேண்டியவை கிடைக்க
வெற்றியே ஜெயம்.
இருப்பதை வைத்து
பறப்பது பழமை

இன்னும் தேடல்
என்றுமே புதுமை
தக்க வைப்பதும்
தகர்த்து எறிவதும்

காலத்தின் கொடுமை
நீயா? நானா?
போட்டியின் நிலமை
வெல்வது யாரோ?
இறைவனின் பெருமை.



கவிஞர் வ சீ கலைவாணி
நெய்வேலி

# மாலவனும் வைணவமும் (பகுதி 24)

## பெரியாழ்வார் தொடர்ச்சி 07

பெரியாழ்வார் மூன்றாவது பத்ததனில் நான்காவது
திருமொழியில் உள்ளபத்தில் கன்றுகளின் பின்கண்ணன்
செல்கின்ற பேரழகில் சொக்கியதை விதந்துரைத்தல்
எண்சீர்கொள் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமது
பைரவிபேர் ராகத்தில் ஆதிதாளக் கூட்டினிலே
கண்ணனருள் சேர்த்திடுமே! தொடர்ந்தமையும் ஐந்தாவது
திருமொழியில் கண்ணபிரான் கோவர்தந கிரியதனை
குடையாக எடுத்ததனை ஆநிரையைக் காத்ததனை
பெருமழையின் ஊறதனை தடுத்ததனை ஆற்றல்தனை
உணர்த்துவன ஒன்பதுமே நன்குணர்த்தும்! எண்சீரால்
கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் வடித்தாரே!
பந்துவரா ளிராகத்தில் அடதாளம் பாட்டினிமை
அவன்கிருபை நமக்காக்கும்! ஆறாவது திருமொழியில்
கண்ணனவன் வேய்ங்குழலின் நாதச்சுவை மாண்புணர்த்தும்!
பதினொருவரி எண்சீரால் கழிநெடிலடி ஆசிரிய
விருத்தமாமே! சாவேரி ராகத்தில் ஆதிதாளப்
பாபொழிவு அருள்கூட்டும்! ஏழாவது திருமொழியில்
இளமைசெறி தன்மகளின் நாரணன்பால் ஈடுபாடு
விளைவெண்ணி தாயுணர்த்தும் கழிவிரக்கம் ஈர்ப்புடைத்து!
அறுசீரால் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமது
பதினொன்றும் யமுநாகல் யாணிப்பேர் பண்ணமைவில்
சீர்திரிபுடை தாளப்பாவே நெஞ்சகத்துக் களிசேர்க்கும்,!
தன்தலைவன் நாரணனுடன் தன்மகள்தான் உடன்போக்கு
கொண்டதனால் தாயவள்தான் மாவருத்தம் கொண்டதனை
பாபத்து எட்டாவது திருமொழியாய் பெரியாழ்வார்
வட்டித்தார்! அறுசீர்கொள் கழிநெடிலடி ஆசிரிய
விருத்தவகை ஆனந்த பைரவிபண் ஆதிதாளக்
கூட்டிசையால் தேன்பாயும் நெஞ்சதனில் ! அரியருளும்
மட்டின்றி மடுத்திடுமே! பெரியாழ்வார் மேல்தொடரும்!
பெரியாழ்வார் பாசுரங்கள் பாச்சுவையில் மூழ்குவமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# ஹைக்கூ

பட்ட மரத்தை
விடாது பற்றிக் கொண்டது
தூதுவளைக் கொடி.

□
காற்றில்லை
அசைகிறது
தூக்கணாங் குருவிக் கூடு.

□
மின் விளக்கு
அத்தனை நெருக்கம்
மொய்க்கும் வண்டுகள்.

□
நீரில் பிம்பம்
புரியவில்லை
ஓவியத்தின் மொழி.

□
கரையில் ஓடம்
தொட்டுப் பார்க்கிறது
மெல்லிய அலைகள்.

□
கூட்டை சுற்றும் பறவை
நின்று கவனிக்கிறது
கிளையில் பாம்பு.



ஊர் ஊருக்கு குளம்
நீந்தும் ஊர்மாடுகள்
எங்கேயும் தெரியவில்லை.

□
நீர்ப் பரப்பில்
நிலைகொண்டு இருக்கவில்லை
கிளையில் பறவை.

□
கொஞ்சம் பறவைகள்
கூடிப் பறந்தன
விம்மி விலகிய காற்று.

கவிஞர் மு. மணிதிருமுருகன்

# மாற்றம்

## (சிறுகதை)



"சங்கரி. என்ன கரி வச்ச?"
"இனிமேதான் ஏதாவது செய்யனும் அக்கா"
"நீங்கள் என்ன வச்சிங்க?"
"தண்ணி ஊத்தின சோறு இருக்கு. தேங்காத் துவையல் அரைக்கனுடா
சரிக்கா மாமா வர நேரமாச்சு நான் ஏதாவது செய்றேன்."
"அம்மா .. அந்த பிரதீப் பையன் என்ன தள்ளி விட்டுட்டாம்மா" சங்கரி மகள் அழுதபடி ஓடி வருகிறாள்
"நீ ஏன் டி அங்க போன? நான் உன்ன நம்ம மணலுலதானே விளையாடச் சொன்னேன். விடு சங்கரி சின்னப் பிள்ளைக்கு என்ன தெரியும். அவ ஆத்தா கொளை இல்லாமலே சாமி ஆடுவா.
நீ போய் ஏதும் சத்தம் கித்தம்போடாதே."
"இல்லக்கா அந்த பையனுக்கு கொஞ்சம் திமிரு தான்
இந்த பிள்ளைய கண்ணுல காங்க விட மாட்டங்கிறான். இவ அப்பா வரட்டும். இதுக்கு ஒரு முடிவு கட்டணும்."
அந்த நேரம் வடக்கு கரையில் சங்கரி கணவர் குமார் தலை தெரிந்தது.
"ஏங்க உங்க அண்ணன் மகன், நம்ம பாப்பாவை நொடுக்கு நொடுக்குனு அடிச்சு போடுறான். இவ அழுதுட்டு வரும்போது பாவமா இருக்கு. நீங்க ஏதாச்சும் ஒரு வார்த்தை சத்தம் போடுங்க. இப்படியே ஊர் பிள்ளைங்க அடிக்கவா நான் பிள்ளை பெத்திருக்கேன்."
அமைதியாக இருந்த குமார் "சாப்பிட்டு விட்டு சிரி நீ எதும் சத்தம் போடாதே நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று வேலைக்கு புறப்பட்டான்.
குமாரின் மனதில் இதற்கு எப்படி தீர்வு காண்பது என்று ஒரே யோசனையாக இருந்தது. "அண்ணன் பாவம் எதை சொன்னாலும் சரின்னு ஏத்துக்கும் அண்ணி வாயாடி. சங்கரி வேர ஒன்னும் கேட்கலனு முகத்தை முகத்தை பார்க்கிறா சின்ன பிள்ளை சண்டைய பெருசு படுத்தினால் நாளைக்கு நல்லதல்ல."
அப்போது ஒரு யோசனை வந்தது. கொஞ்சம் செலவுதான் பரவாயில்லை. இது சமாதானத்திற்கான வழி என்று. அந்த முடிவை நோக்கி சென்றான் குமார். தெருவில் யாரு வீட்டிலும் TV இல்லை புதிய கலர்TV. 8000 ரூபாய்க்கு வாங்கி வந்தான். இப்பம் சாயந்திரம் ஆச்சினா மதினியே சிரித்தபடி குமார் வீட்டிற்கு TV பார்க்க வருவாள் என் பிள்ளைய மடியில் வைத்து கொஞ்சுவாள்.

மூ. மணிதிருமுருகன்

# ஆகாயத்தில் சிவந்த மேகங்கள்

## அத்தியாயம் -1

சிறு நவீனம்

தொண்டர்கள் வரிசையாகப் போட்ட மாலையை வாங்கி சோபாவில் போட்டுவிட்டு திரும்பிய போதுதான் இந்துமதி அவனைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பது புரிந்தது.

தமிழரசன் வெளியே எட்டிப்பார்த்தான். "வெளிநாடு செல்லவிருக்கும் அமைச்சர் தமிழரசன் வாழ்க" என்ற கூக்குரல் வானைப் பிளந்தது.

வீட்டிலேயே எம்.எல்.ஏக்களும் எம்.பிக்களும் கூடியிருக்க, விமானத்தில் புறப்படத்தயாராக இருந்த தமிழரசன், இப்போது இந்துமதியை தனியாக சந்திக்க முடியுமா என்று எண்ணிக் கொண்டிருந்த போது, உதவியாளன் முகிலன் "என்னண்ணே என்ன விஷயம் ?" என்று கேட்டான்.

"'ஒரு நிமிஷம் இந்துமதியோடு பேசவேண்டும்."

"என்ன காதலிக்கு கடைசி நேர முத்தமா?"

"சும்மா விளையாடக்கூடிய நேரமா இது?"

"சரி சரி" என்றவன் எல்லோரையும் காரில்; ஏறச் சொல்லிவிட்டு கொஞ்சம் சத்தமாக , "தலைவரே உங்களுடைய முதல் வெளிநாட்டுப் பயணம் இது, அம்மாவின் போட்டோவிற்கு மாலை போட்டுவிட்டுப் போங்கள்" என்றான்.

அவனிடம் மெதுவாக "சாகசக்காரன் நீ" என்று சொல்லிக் கொண்டு மெதுவாக தன் அறையின் பக்கம் வந்தான் தமிழரசன்.



...தொடரும்

இரஜகைநிலவன்

# தமிழ் ஒளி

## கட்டுரை

### பிறப்பு:



கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி அருகில் உள்ள ஆடூர் எனும் கிராமத்தில் 21-9-1924 அன்று சின்னையா — செங்கேணி அம்மாள் இணையரின் மகனாகப் பிறந்தார் தமிழ் ஒளி. இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் விஜயரங்கம். பாவேந்தர் பாரதிதாசன் தான் இவருக்கு தமிழ் ஒளி என்று தமிழ்ப் பெயர் சூட்டினார்.

### பட்டமும் படிப்பும்:

தமிழ் ஒளி ஆரம்பக் கல்வியை புதுவை முத்தியால்பேட்டை அரசு நடுநிலைப் பள்ளியில் படித்தார். உயர்கல்வியை பாவேந்தர் பாரதிதாசன் பணியாற்றிய புதுவை கல்வே கல்லூரியில் பாரதிதாசனின் மாணவனாக புகுமுக வகுப்பு படித்தார். பட்டப்படிப்பை கரந்தை தமிழ் கல்லூரியில் முடித்து பட்டம் பெற்றார்.

கல்லூரி நாட்களில் திராவிடர் கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். திராவிடர் கழகத்தின் மாணவர் மாநாட்டில் பங்கெடுத்து கவிதை வாசித்தார்.

### தடை செய்யப்பட்ட முரசு இதழ்:

பின்னாளில் பாரதிதாசன் அவர்களின் மகனான மன்னர் மன்னன் அவர்களுடன் இணைந்து தமிழ் ஒளி 'முரசு' என்ற இதழை நடத்தினார். இந்த இதழ் பல்வேறு சீர்திருத்த கருத்துகளையும், விடுதலை உணர்வையும் ஊட்டியதால் அரசினால் தடை செய்யப்பட்டது. மேலும் இதழ் நடத்தியவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. மன்னர் மன்னன் இளம் வயது காரணமாக விடுதலை செய்யப்பட்டார். தமிழ் ஒளி இரண்டு வாரங்கள் சிறைவாசத்திற்குப் பின் வெளிவந்தார்.

## தமிழ்நாடு பத்திரிக்கையில் இந்தி எதிர்ப்பு கவிதை:

முதல் மொழிப்போர் காலத்தில் தமிழ்நாடு பத்திரிகையில் இவர்,



"இந்தியை இங்கே அழைக்கின்றீர்கள் - கூர்
ஈட்டியை நெஞ்சில் நுழைக்கின்றீர்கள்"
காரிருள் இன்றும் விடியவில்லை - எம்
காற்றனை இன்றும் ஒடியவில்லை!
இதர்மிசை இந்தி உயர்குவதோ - எங்கள்
செந்தமிழ் அன்னை அயர்குவதோ?"

என்று எழுதிய பாடல் போராட்டக் களங்களில் பாடப்பட்டது. பெரியாரின் 'குடியரசு', அண்ணாவின் 'திராவிட நாடு', சி.பா.ஆதித்தனாரின் நாம் தமிழர் இயக்கத்தின் சார்பாக ஈரோடு சின்னசாமி நடத்திய 'சமநீதி' மற்றும் 'தமிழன்' ஆகிய பத்திரிக்கைகளில் இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து தொடர்ச்சியாக கவிதைகள் எழுதினார்.

## பொது உடைமைக் கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில் தமிழ் ஒளி:

1947-ம் ஆண்டிற்குப் பின் பொதுஉடைமை இயக்கத்தின் தலைவர் ஜீவா அவர்களால் ஈர்க்கப்பட்ட கவிஞர் தமிழ் ஒளி திராவிட இயக்கத்தில் இருந்து பொதுஉடைமை இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்.

1948-ம் ஆண்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. "ஜனசக்தி" பத்திரிகை அலுவலகமும் மூடி சீல் வைக்கப்பட்டது. கட்சித் தலைவர்கள் தலைமறைவு வாழ்க்கை நடத்தினர். அந்த நெருக்கடியான காலக்கட்டத்தில் "முன்னணி" எனும் இதழ் தலைமறைவாளர்களுக்கு தொடர்பு சாதனமாக விளங்கியது. இவ்விதழை 'கவிஞர் குயிலன்' தொடங்கினார். அவருடன் இணை ஆசிரியராகப் பொறுப்பேற்று கவிஞர் தமிழ் ஒளி கடுமையாக உழைத்தார்.

## பொதுவுடைமையை நேரடித் தமிழில் படைப்பிலக்கியமாய்

பொதுவுடைமைக் கருத்துக்கள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் வாயிலாக மட்டுமே மக்களிடம் சென்று கொண்டிருந்த காலத்தில், தமிழ் ஒளி அந்த நிலையை மாற்றியமைத்தார். தமது படைப்பிலக்கியத்தின் மூலம் பொதுவுடைமைக் கருத்துக்களை பரப்பினார். 'முன்னணி' இதழில் வராம்தோறும் தமிழ் ஒளி கவிதை, கதை, ஓரங்க நாடகம் என இலக்கியப் பணி செய்தார். முன்னணி பத்திரிகையில் மட்டுமன்றி எழுத்தாளர் 'விந்தன்' நடத்திய 'மனிதன்' பத்திரிக்கையிலும் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.

1952-ம் ஆண்டு மே தினம் குறித்து முதன்முதலில் தமிழ் ஒளி தமிழில் கவிதை எழுதினார். அதனால் தான் பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார், "பாரதி-பாரதிதாசன் இருவரையும் தாண்டி உலகத் தொழிலாளர்களின் இயக்கமாகிய பொதுவுடைமை போர்க்களத்தில் களப்போர் வீரனாக விளங்கியவன்"
என்று தமிழ் ஒளியைப் புகழ்ந்தார்

"கோழிக்கு முன்னெழுந்து
கொத்தடிமைப் போலுழைத்துக்
கண்ணீர் துடைக்க வந்த காலமே நீ வருக!"
"மண்ணை இரும்பை மரத்தைப் பொருளாக்கி
விண்ணில் மழையிறக்கி
மேதினிக்கு நீர்ப்பாய்ச்சி
வாழ்க்கைப் பயிரிட்டு
வாழ்ந்த தொழிலாளிகையில்
விலங்கிட்டுக் காலமெலாம்
கொள்ளையிட்ட பொய்யர் குலம் நடுங்க
பொங்கிவந்த மே தினமே!"


மே தினம் குறித்தான கவிதை நூலின் விற்பனையில் பாதித்தொகையை அக்காலகட்டத்தில் மலேசியாவில் நாடு கடத்தப்பட்ட தமிழர்களுக்காக தமிழ் ஒளி வழங்கியது குறிப்பிடத்தக்கது.

குமரர். தர்மசீலன் இதழாசிரியர்

### தொழிலாளர் போராட்டத்தில் தமிழ் ஒளி:

ஆலைத் தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், மெட்ராஸ் எலக்ட்ரிக் ட்ராம்வே தொழிலாளர்கள், புதுவைத் தொழிலாளர்கள் ஆகிய தொழிலாளர்களின் போராட்டங்களை தனது கனல் தெறிக்கும் கவிதை வரிகளால் ஆதரித்தார்.

### எழுதிய காவியங்களும் நூல்களும்:





- கவிஞனின் காதல் - 1947
- நிலை பெற்ற சிலை -1947
- வீராயி - 1947
- மே தின ரோசா -
- விதியோ வீணையோ -1961
- கண்ணப்பன் கிளிகள் - 1966
- புத்தர் பிறந்தார் (முற்றுப் பெறாத காவியம்
- கோசலக் குமாரி - 1966
- மாதவிக் காவியம் - 1995
- சிலப்பதிகாரம் காவியமா நாடகமா
- திருக்குறளும் கடவுளும்
- தமிழர் சமுதாயம்

### இறப்பு:

திருமணமே செய்யாமல் தொழிலாளர்களின் துயர் துடைக்க உழைத்த கவிஞர் இறுதி காலத்தில் காசநோய்க்கு உள்ளாகி தான் பிறந்த ஆடூர் கிராமத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ம் நாளன்று மறைந்தார்.

## நாளை
# நமதே

**பயத்தையும், தயக்கத்தையும்,**
**தூக்கிப்போடுங்கள்;**
**வெற்றி உங்கள் காலடியில்.**



**அகர முதல இலக்கிய பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே — முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு    அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு    சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :
9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa    www.aagaramuthala.com    aagaramuthala@gmail.com